பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

05 04 2026 SUNDAY 7 15 PM

ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் கடல்சார் துறை முக்கியப் பங்கு வகிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. வளர்ச்சியடைந்த கேரளத்தை உருவாக்க தேசிய ஜனநாயக கூட்டணி பாடுபடும் என்று பிஜேபி கூறியுள்ளது.

3. அஸ்ஸாமில் கடந்த சட்டப்பேரவை தேர்தலின் போது அளித்த வாக்குறுதிகளை பிஜேபி அரசு நிறைவேற்றவில்லை என்று காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது.

4. ஈரானில் உள்ள அணுசக்தி கட்டமைப்பு வசதிகளின் பாதுகாப்பு குறித்து, உலக சுகாதார அமைப்பு கவலை தெரிவித்துள்ளது.

5. உலக பாரா டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Vijaya Deepika வெண்கலப்பதக்கம் வென்றார்.

>>>>>>><<<<<<<

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் கடல்சார் துறை முக்கியப் பங்கு வகிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தேசிய கடல்சார் தினத்தை ஒட்டி, சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

கடல்சார் துறையை வலுப்படுத்துவதற்காக மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளையும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்கால தேவையையும் கருத்தில் கொண்டு, கடல் போக்குவரத்துச் சட்டங்கள் திருத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கடல்சார் துறையில் எண்ணற்ற வாய்ப்புகள் உள்ளதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

தமிழகம், மேற்குவங்கம், அஸ்ஸாம், கேரளம் மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தலில் பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதற்கான கண்காணிப்பு பணிகளில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பறக்கும் படையினர் ஈடுபட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இப்படையினர் மேற்கொண்ட சோதனைகளின் போது, உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்பட்ட 651 கோடி ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்குவங்கத்தில் மட்டும் 319 கோடி ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

தமிழகத்தில் 170 கோடி ரூபாய் அளவிற்கும், அஸ்ஸாமில் 97 கோடி ரூபாய் அளவிற்கும், கேரளத்தில் 58 கோடி ரூபாய் அளவிற்கும், புதுச்சேரியில் 7 கோடி ரூபாய்

அளவிற்கும் பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக அந்த செய்திக்குறிப்பில் கூறியுள்ளது.

>>>>>>><<<<<<<

அஸ்ஸாம் சட்டப்பேரவை தேர்தலில் பயன்படுத்தப்படவுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில், வேட்பாளர்களின் படங்களை பொருத்தும் பணி நிறைவடைந்துள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

126 சட்டப்பேரவை தொகுதிகளிலும் இப்பணி நிறைவடைந்துள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் இப்பணி மேற்கொள்ளப்பட்டதாக அதில் கூறப்பட்டுள்ளது.

43 ஆயிரத்துக்கு மேற்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் இந்த தேர்தலில் பயன்படுத்தப்படவுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

வளர்ச்சியடைந்த கேரளத்தை உருவாக்க தேசிய ஜனநாயக கூட்டணி பாடுபடும் என்று பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

கேரள மாநிலம், எர்ணாகுளத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர். இந்த மாநிலத்தைச் சேர்ந்த இளையோருக்கு உரிய வேலைவாய்ப்புகள் கிடைப்பதை பிஜேபி தலைமையிலான கூட்டணி உறுதி செய்யும் என்று தெரிவித்தார்.

இந்த தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றிபெறும் என்றும் திரு. அமித் ஷா நம்பிக்கை தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

அஸ்ஸாமில் கடந்த சட்டப்பேரவை தேர்தலின் போது அளித்த வாக்குறுதிகளை பிஜேபி அரசு நிறைவேற்றவில்லை என்று காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

அம்மாநிலத்தில் இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பேற்றால் தேர்தல் அறிக்கையில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் என்று கூறினார்.

>>>>>>><<<<<<

விவசாயிகளின் நலனில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

நாடுமுழுவதும் பல்வேறு பகுதிகளில் பெய்த மழை காரணமாக, ஏற்பட்டுள்ள பயிர் பாதிப்பு குறித்து, அதிகாரிகள் ஆய்வு மேற்கொள்ளுமாறு அமைச்சர் அறிவுறுத்தியுள்ளதாக வேளாண் துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த ஆய்வறிக்கை கிடைக்கப் பெற்ற பின்னர், உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, திரு. சிவராஜ் சிங் சௌஹான், மாநிலங்களின் வேளாண் துறை அமைச்சர்களோடு விரைவில் ஆலோசனை நடத்தவுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<

நாடுமுழுவதும் 5 கிலோ சமையல் எரிவாயு சிலிண்டர்கள் தடையின்றி விற்பனை செய்யப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதனைப் பெறுவதற்கு முகவரிச் சான்று தேவையில்லை என்று பெட்ரோலியத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

அடையாள ஆவணத்தை மட்டும் சமர்ப்பித்து இந்த சிலிண்டரை பெறலாம் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமையல் எரிவாயு விநியோகஸ்தர்களிடம் இந்த சிலிண்டர்கள் போதிய அளவு கையிருப்பு உள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குழாய் மூலம் சமையல் எரிவாயு இணைப்பு கோரி, புதிதாக 3 லட்சத்து 90 ஆயிரம் பேர் விண்ணப்பம் செய்துள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

அம்ரித் பாரத் ரயில் பெட்டிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள நவீன வசதிகளை ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் இன்று பார்வையிட்டார்.

புதுதில்லி ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த இந்த ரயில் பெட்டிகளின் மேம்படுத்தப்பட்ட வசதிகள் குறித்து. அதிகாரிகளிடம் அமைச்சர் கேட்டறிந்ததாக ரயில்வேயின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பயணிகளின் நலனை கருத்தில் கொண்டு கூடுதல் வசதிகளை கொண்டதாக இந்த, மாதிரி பெட்டிகள் வடிவமைக்கப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

நாட்டின் முக்கிய துறைமுகங்களில், சரக்கு கையாளும் திறன் கடந்த நிதியாண்டில் 7 சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

மத்திய அரசு மேற்கொண்ட சீர்திருத்த நடவடிக்கைகளே இதற்கு காரணம் என்று கப்பல் போக்குவரத்து துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

சர்வதேச தரத்திற்கு இணையான கட்டமைப்பு வசதிகள், துறைமுகங்களில் ஏற்படுத்தப்பட்டு வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

நீதித்துறை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது அவசியம் என்பதை மாநில அரசுகள் உணர்ந்துள்ளதாக உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு. சூர்யகாந்த் கூறியுள்ளார்.

தெலங்கானா உயர்நீதிமன்றத்தில் புதிய வசதிகளை ஏற்படுத்துவதற்கான கட்டுமானப் பணிகளை இன்று தொடங்கி வைத்து அவர் பேசினார்.

அஸ்ஸாம், ஹிமாச்சலப்பிரதேசம், உத்தரபிரதேசம், ஆந்திரா ஆகிய மாநிலங்களில் தாம் இதுபோன்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்றதை அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போது தெலங்கானாவும் இதில் இணைந்துள்ளாக அவர் கூறினார்.

நீதித்துறையின் சேவைகள், பொதுமக்களுக்கு விரைவாக சென்றடைவதற்கு அதன் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டியது அவசியம் என்றும் திரு. சூர்யகாந்த் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

மஹாராஷ்ட்ராவில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வேளாண் பயிர்களுக்கு உரிய இழப்பீடு வழங்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் கூறியுள்ளார்.

இன்று நாசிக்கில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பயிர் பாதிப்பு குறித்த ஆய்வுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

இப்பணிகள் நிறைவடைந்தவுடன் உரிய இழப்பீடு வழங்கப்படும் என்று திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

ஈரானில் உள்ள அணுசக்தி கட்டமைப்பு வசதிகளின் பாதுகாப்பு குறித்து, உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநர் திரு. Tedros Adhanom கவலை தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், அதன்மீது நடத்தப்படும் தாக்குதல், நீண்ட காலத்திற்கு சுகாதார பாதிப்பை ஏற்படுத்தும் என்று குறிப்பிட்டுள்ளார்.

பதற்றத்தை தணிக்க சம்பந்தப்பட்ட நாடுகள் முன்வர வேண்டும் என்றும் திரு. Tedros Adhanom கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>>><<<<<<

இந்தியாவுடனான வர்த்தக உறவை மேலும் வலுப்படுத்த விரும்புவதாக நேபாளம் கூறியுள்ளது.

மஹாராஷ்ட்ர மாநிலம், தானே-யில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய இந்தியாவிற்கான நேபாள தூதர் திரு. சங்கர் பிரசாத் சர்மா, இருநாடுகளுக்கு இடையேயான வர்த்தகத்தை அதிகரிப்பதற்கான புதிய வாய்ப்புகளை கண்டறிய வேண்டும் என்று வலியுறுத்தினார்.

>>>>>>><<<<<<

உலக பாரா டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Vijaya Deepika வெண்கலப்பதக்கம் வென்றார்.

துருக்கியின் Yalova-வில் நடைபெற்ற இப்போட்டியின், மகளிர் ஒற்றையர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>>>>><<<<<<

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில், சென்னை - பெங்களூரு இடையேயான ஆட்டம் இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

பெங்களூருவில் நடைபெறவுள்ள இப்போட்டியில் டாஸ் சென்ற சென்னை அணி முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.

ஹைதாரபாதில் சற்றுமுன் முடிவடைந்த ஆட்டத்தில் லக்னோ அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் ஹைதராபாத் அணியை வென்றது.

>>>>>>><<<<<<

ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Meenakshi, Jaismine, லோகேஷ் மற்றும் Akash அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

மங்கோலியாவின் Ulaanbaatar-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 48 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் Meenakshi 5-0 என்ற புள்ளிக்கணக்கில் ஜப்பானின் Yuka Sadamatsu-வை வென்றார்.

மகளிர் 57 கிலோ எடைப்பிரிவு காலிறுதிஆட்டத்தில் Jaismine, 5-0 என்ற புள்ளிக்கணக்கில் சீனாவின் Ziyi Chen-ஐ வென்றார்.

ஆடவர் 85 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் Lokesh 5-0 என்ற புள்ளிக்கணக்கில் தென்கொரியாவின் Gichae Kim-ஐயும், 75 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் ஆகாஷ், துர்க்மெனிஸ்தானின் Yhlas Bagtyyarov-வையும் வென்றனர்.

>>>>>>><<<<<<

எகிப்தில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Abhay Singh காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 9-11, 11-8, 3-11, 11-4, 11-8 என்ற செட்கணக்கில் எகிப்தின் Aly Abou Eleinen-ஐ வென்றார்.

>>>>>>>END<<<<<<<